[illegible]சினை 4. உள்ளூர் விலை அணா 1-3.
வெளியூர் ,, 1-6.

# சகலஸ்த்ர கோத்திர வணிக வைசிய குல விளக்கம்.

ஸ்ரீமான், தமிழ்ப் பண்டிதர், கொரக்கோட்டை,
ப. வடிவேலு செட்டியார் அவர்களால்
இயற்றியதை

சென்னை மஹா வித்வான் ஸ்ரீ[illegible]
கோவளம் அப்பாசாமி செட்டியார் அவர்கள்
குமாரரும்,

வைசியக் கல்வி விளக்க சங்கத்து வித்வானுமாகிய
ஸ்ரீமான். கோ. அ. சிவசங்கரஞ்செட்டியார் அவர்களால்
பார்வையிடப்பட்டு,

வணிக வைசிய குலசிரோமணிகளின் பொருளுதவியால்
புரசைவாக்கம்
மு. கந்தசாமி செட்டியார் அவர்களால்
பிரசுரம் செய்யப்பட்டது.

1933.

[illegible]ரிஜிஸ்தர் செய்தது

[illegible]ப் பத்திரப் படுத்துங்கள்.

[illegible] 13 MAY 1938 [illegible]

# வணிக வைசிய குல விளக்கம் கிடைக்கும் இடங்கள்.

---

ம-ா,ா-ஸ்ரீ கோ. சிவசங்கரஞ் செட்டியார்,
தமிழ்ப் புலவர்,
நெ. 13, நயினியப்பன் வீதி, மண்ணடி, மதராஸ்.

,, தே. சு. கங்காதர செட்டியார்,
மணங்கப்பன் தெருவு, ஆனைகெவுனி, சென்னை.

,, வ. கோ. புருஷோத்தம செட்டியார்,
மருந்துக்கடை வியாபாரம்,
நெ. 12-A. டிவிஷன், கொத்தவால்சாவடி, சென்னை.

,, கோ. ர. கன்னியப்ப செட்டியார்,
அரிசி மண்டி, நெ. 11, சண்டா சாகிப் தெருவு,
பீர்சாப்பேட்டை, சென்னை.

,, கோ. இரத்தின செட்டியார்,
நெ. 9, சாமிப்பண்டாரம் தெருவு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

,, M. அய்யாவு செட்டியார்,
செகிரிடெரி,
திருநாவுக்கரசு சுவாமிகள் பக்த மடாலயம்,
லாலாகுட்டி தெரு,
பெரியமெட்டு, மதராஸ்.

762

13 MAY 1933

# வணிக வைசியகுல சகோதர சகோதரிகளுக்கு

# ஒரு விண்ணப்பம்.

சகத்திர கோத்திர வணிக வைசியகுல சகோதர சகோதரிகாள்!

பன்னலம் பதிந்த நம் பரதகண்டத்தில் ஒவ்வொரு குலத்தினரும் தங்கள் தங்கள் குலமேன்மையையும், விருத்தியையும், பிற நலங்களையுங் கருதி தமக்கென தனிச் சங்கங்கள் பல ஸ்தாபித்தும், கூட்டங்கள் கூடியும், நூல்களை வெளியிட்டும் வருமிந்நாளில், உலகிற் பல்லாற்றானுஞ் சிறந்து விளங்கும் 'ஆயிரங் கோத்திரத்தார்' என்னும் வணிக வைசியகுல மக்களாகிய நாம் நமதுகுல முன்னேற்றத்தைக் கருதாதிருப்பது நமது ஊக்கக் குறைவே யன்றோ?

நமது குல முன்னோர்களாம் பல்லாயிரக் கணக்கானவர்கள் தங் குல மேன்மையைக் கருதி, குலாசார ஒழுக்க முறை தவறாது நடந்து என்றும் அழிவிலா சிவ சாயுச்சியத்தை யடைந்தார்கள். அவர்களது அரும்பெருங் குணாதிசயத்தைப் பற்றி பல நூல்களினும் பரக்கக் காணலாம். ஆனால், அவையெல்லாம் நமது வணிக வைசிய குல சகோதர சகோதரிகள் படித்துணருமாறு ஒருங்கு சேர்ந்தில்லாமலும், எல்லோரும் எளிதில் வாசித்துணரத் தக்க எளிய வசன நடையில்லாமலும் பெரும்பாலும் பாட்டுகளாகவு மிருக்கின்றமையால் பலரும் படிக்கும் பாக்கியமில்லாது போகின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் கருதி அடியிற்காணும் யான் நமது குலமேன்மையையும்,

நங்குலப் பெரியோர்களின் புகழையும் நிலைநாட்டுவான் வேண்டி பல நூல்களிலும் ஆங்காங்கு மல்கிக்கிடக்கும் நங்குலப் புகழுரைகளை ஒருங்கு சேர்த்து ஒரு நூலாக வெளியிட வேண்டுமென்ற நோக்கத்துடன் வணிக வைசிய குல விளக்கம் என்னும் பெயர் பூண்டு சிறுசிறு புத்தகங் களாக வெளியிட்டுப்பின் அவை யனைத்தையும் ஒன்று சேர்த்துக் கொள்ளுமாறு இப்பெரும் பணியி லீடுபட் டிருக்கின்றனன்.

இங்ஙனம், வெளிப்போந்த விச்சஞ்சிகை நான்காவ தாகும். இதற்குமுன் 1, 2, 3 சஞ்சிகைகள் வெளிவந் திருக்கின்றன. இனியும் விரைவில் 5, 6-ம் வெளிவரத் தக்க ஏற்பாடுகள் செய்திருக்கின்றனன். அதற்கு மேலும் சஞ்சிகைகள் வெளிவரத்தக்க முயற்சி எடுத்துக்கொண் டுள்ளேன். ஆகையால், யான் எடுத்துக்கொண்ட இப் பெரும் பணி (வேலை) யானது முற்றுப் பெறத்தக்க உதவி களைச்செய்து பேரும் புகழும் பெற்றோங்குமாறு சகத்திர கோத்திரச் சிகாமணிகளாம் வணிக வைசியகுலச் சகோதர சகோதரிகளைக் கேட்டுக்கொள்வதுடன், யானெடுத்த விப் பெருங் காரியத்தை இடையூறின்றி இனிது முடிக்குமாறு எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

இவ்விதம்,

வணிக வைசிய ஆயிரவர்களின் சங்கத்திலொருவராகிய.
புரசை மு. கந்தசாமி செட்டியார்,
நெ. 13, நயினியப்பன் தெரு,
மண்ணடி, மதராஸ்.

890
201.44

# வந்தியம்மையார் சருக்கம்.

## சொக்கேசர் மண்சுமந்த வைபவம்.

(சஞ்சிகை 3, பக்கம் 96, முன்றொடர்ச்சி)

குலத்துதித்து விளங்கும் 'வந்தி' யென்பவளின் ஆள். நான் அவ்வம்மையாருக்காக அளந்துவிடப்பட்ட உடைப்பின் கரையை அடைப்பதற்காக வந்திருக்கின்றே னெனக் கணக்கிலே பதிவு செய்துகொண்டு, மனத்திலே எண்ணுதற் கெட்டாதவரும், வாக்கினால் வழுத்தற் கரியவரும், மறைகளா லளவிட முடியாத வருமான, சந்திரனை சடா மகுடத்திற் றரித்த சோமசுந்தரக் கடவுளானவர் வந்திக்காக அளந்துவிட்டப் பட்டிருக்குங் கரையை அடைக்கத் தொடங்கினர்.

அன்பரெவர்களுங் களிப்புற வதிசயத் திருவிளையாட் டயருஞ் சிவபெருமானின் திருவுளத்தை யாரே அறிய வல்லார்! அவரது திருவுளக்கனிவும், அன்பர்மாட் டன்பு கூர்ந்தருளிய திருவிளையாட்டும் உலகின் மக்களறியுமாறு கூடையிலே மண்ணைவெட்டி அந்த மண் கூடையைத் தலைமே லெடுத்து வைப்பதும், அது கனமாயிருக்கிற தென்று மண் முழுதும் நிலத்திலே விழக் கொட்டிவிட்டுப் பின்னர் குறைவாக மண்ணை வாரியெடுத்துக் கொண்டுபோய்க் கொட்டித்தட்டிப் பின்னும் முன்போலவேசெய்து மண்ணை வாரிக்கொண்டுபோய்க் கரையாகக் கொட்டினர். சுவாமிகள் இவ்விதம் இருமுறை மண் சுமந்ததினால் களைப்புற் றும், மெய்ச்சோர்ந்தும், கைகளிலும், தலையிலும் வடுப்படவும், பிரமனாலும், விஷ்ணுவினாலும் தேடிக்காணப்படாத

திருப்பாதங்களிலே நீர் சுரந்து சிவப்புற்று வருந்தி நடந்து, தழைத்து நிழலடர்ந்த ஓர் மரத்தினடியை நண்ணி, நிலத்திலே மண்கூடையைக் கவிழ்த்து அதன்மீது சந்திரனைத் தரித்திருக்கின்ற திருமுடியை வைத்துக்கொண்டு, செந்தாமரை மலர்போலு மேனியுடைய சிவபெருமான் தமது அருள் வடிவை யெண்ணிச் சற்றுத் துயின்றனர்.

தூக்கத்தி லாழ்ந்த முழுமுதற் பெருமான் அம்மரத்தை கல்லால விருட்சமாகவும், அலைகள் வீசிக்கொண் டிரைந்துவரும் வைகை நதிப் பிரவாகத்தை யடைக்கவந்தவர்களை எல்லாம் முழுதுணர்ந்த மெய்ஞ்ஞானிகளாகவுங் கொண்டு களிப்புற்று மெய்யுணர்ச்சியாகிய மோனமயச் சித்தவுருவைத் தெளிவிப்பவர் போன்றுத் தெளிந்தெழுந்து, ஒப்பாரும் மிக்காருமில்லாத சந்திர சடாதர மூர்த்தியானர் ஆனந்தக் கூத்தாடியும், சாமவேதம்போல வமுதரசமானப் பாடல்களைப் பாடியும், சிரித்தும் விளையாடும் சிவபெருமான் தனது விளையாட்டை யாவரேனும் பார்த்தால், அங்ஙனம் மிகவும் பயந்தவர்போல தனது அருள் விளையாட்டைவிட்டு வேலை செய்கிறதும், வேலை வாங்குவோர்கள் சற்றுப் பாரா முகமாயிருந்தால் மணலைக் குவித்து அதன் மேலே குதித்துத் தாளெழுமாறுப் பாய்ந்து ஓடிக்குதித்தும், பின்னர் உன்மத்தம் பிடித்தவர்போல வாய்பேசாம லுட்கார்ந்திருப்பதும், தாம் மிகுதியும் வேலைசெய்ததுபோல் இளப்புற்று வருந்தியும், வேலையின் மிகுதியால் சரீரத்தில் வேர்வை யொழுகுவது போற் காட்டியும், அவ்வேர்வையைப் போக்குவான் வேண்டி வாயாலூதிக் காற்றுவரச் செய்வதுபோல் நடித்தும், மிகுதியும் பசியுற்றவர்போல முன்னர் வந்திகொடுத்த பிட்டின்மீது நாட்டமுற்று “வந்தியம்மையார்” இல்லம்

நோக்கிச்சென்று, கூனற்கிழவியாகிய வந்தியம்மையாரைக் கண்டு, " அம்மே! தங்களுக்காக அளந்துவிடப்பட்டிருந்த அளவுக் கதிகமாகவே கரை அடைபட்டு வருகின்றது. எனக்குப் பசி மிகவெடுத்தது. ஆதலின் வந்தேன். தாயே! விரைவிற் பிட்டிடுக! மீண்டும் நான் வேலைக்குச் சீக்கிரம் போய்ச் சேரவேண்டும்" என்றுச் சொல்லினர் சொக்கலிங்கக் கடவுள்.

அங்ஙனமே, வந்தியம்மையார் பசியால் வருந்திவந்ததியம்பக் கேட்டுளம் பதறி அப்போது சுட்ட பிட்டைக் கொடுத்தனள். கூலியாளாகவந்த முழுமுதற் பெருமான் தனக்கு வந்தி யன்புடனளித்தப் பிட்டுகளை இருகைகளையு மேந்தி வாங்கி, கையுஞ்சுட வாயுஞ்சுட வாயிலே போட்டுக் கொண்டு இரண்டு தாடைகளையும் பிடித்தொற்றிக் கொண்டு வாயைப் பதமாக்கி நீரைக்குடித்துப் பசிதீர்ந்ததென்று மேற்கொண்டுவந்த வேலையின்மீது நாட்டமாய்ச் சென்று மண்ணைவெட்டி யெடுத்துக்கொண்டுபோய் வேற்றுப் பங்கிலே கொட்டி உடைப்படையக் கண்டு கெர்ச்சித்துத் தமது வலிமை பொருந்திய தோட்களைக் கொட்டிப் பாங்கர் நிற்கின்றவர்களைத் தழுவிச் சந்தோஷித்தும், பின்னர் கூடையில் வெட்டிவாரிய மண்ணைத் தூக்கிக்கொண்டு கூடையோடு கால் தடுக்கி வழுக்கி விழுந்து ஆற்று வெள்ளத்திலே நீந்தி விளையாடிக் கூடையை எடுத்துக்கொண்டு கரைமேலேறிக் கூடையைக் கீழே (பூமியில்) அடித் தடித்துக் கூடையிலுள்ள ஈரம் போகச்செய்தும், அந்தக்கூடையில் அவிழ்ந்த கட்டுகளைப் பிரித்துக் கட்டிக்கொண்டு மீண்டும் மண்ணைவெட்டி எடுத்துக்கொண்டுபோய்க் கரையிலே கொட்டியும், கூடை ஈரமாயிருந்த படியால் அக் கூடையில் ஒட்டிக்கொண்ட மண்போகக் கூடையை

உடைப்பிலே போய்விழும்படித் தட்டியும், மீண்டும் அக்குடையை எடுப்பான்வேண்டி வெள்ளத்திலே விழுந்து, குடையை அலையிலே போகவிட்டுத் தாம் தாவித் தாவிப் பிடிப்பார்போல தண்ணீரில் நீந்தி விளையாடியும், ஓர் மரத்தை யாதாரமாகத் தெப்பம்போலப் பிடித்துக்கொண்டு ஜலத்திலே மிதந்து பின்னர் கரையிலே தெப்பத்தை மோதச்செய்து மறுபடியும் வெள்ளச் சுழலிலே சென்று சுழன்று விளையாடியும், ஜலத்துண் மூழ்கித் தூரத்திற் போய்த் தலையைத் தூக்கி யெழுந்து பெருமூச்சுவிட்டுத் தளர்ந்து நின்று இளைப்பாறி இடையிலே தரித்த கச்சிலிருந்த பிட்டை யள்ளித்தின்றும், அங்கு வேலை செய்வோர் யாரும் வேலையை விடுமாறு அவர்களுக்கெல்லாம் தன்னிடமுள்ள பிட்டை அள்ளிக்கொடுத்தும் விநோதக் கூத்தாடிக்கொண்டிருந்தார் வந்தியின் வேலையாளாகிய சொக்கலிங்கக் கடவுள்.

அது போழ்து ஆட்களை வேலைவாங்கும் அதிபர்கள் சித்தமூர்த்திகளாகிய சிவபிரானை எளியார் மாட்டிரங்கி இன்ப விளையாட்டயரும் இறைவனென்றுணராமல் வேலை செய்யவில்லையென்று கோலுகொண்டோங்கி அடிக்க வந்தனர். அவ்விதம் அடிக்க வந்தவரை அமலன் பார்த்துத் தனதிரண்டு கைகளாலும் அவர்களடித்த அடியைத் தடுத்துத் தாங்கிக்கொண்டு சிரித்தும், பரிகசித்தும் நின்றனர். இவ்விதமாக தத்துவ ஞானிகளாலன்றிக் காணற்கரிய சோதியங் கடவுளான சோமசுந்தரர் உலகத்தார் ஊனக்கண் கொண்டு பார்க்குமாறு அடியார்களுள்ளே தாமுமொரு அடியார்போல நின்று உலகங்களை யெல்லாம் சிருட்டித்தும், காத்தும், அழித்தும் வருகின்ற அமலன் ஒரு கூலியாளாகித் திருவிளையாடல் செய்யுங்காலத்தில்,

அங்ஙனம் ஆட்களை சாக்கிரதையோடும் வேலைசெய்யத் தூண்டுமாறு கோல்கைக்கொண்ட வீரர்கள் வேலையாட்க ளுடனே கூடவிருந்து வேலையைச் சரியாக வாங்குகிறவர்க ளாகையாலே உடைப்பெடுத் தடைப்பட வேண்டிய கரை யைப் பார்க்க வரவும், அவ்விதம் வேலையாட்களின் தலை மையாளர் வரும்போது அவரவர்களும் தங்கள் தங்களுக் கென அளந்துவிடப்பட்ட பங்குகளெல்லாம் மலைபோல உறுதியாகக் கரைகளிட்டு வருவதையும், வந்தியென்னும் கூன் கிழவியின் பங்கு மாத்திரம் அடைபடாமலிருப் பதைப் பார்த்து, வேலையாளென வெதிரே நிற்கும் நின் மலனை விளித்து, "நீயேன் இன்னும் உனக்குற்ற பங்கை அடைக்காமலிருக்கின்றாய்?" என்று கேட்டார்கள்.

அதற்கு அரவாபரணன் பதில் மொழிப் பகராமல் மவுனமாக மன்மதன்போல விளங்கநின்றனர். வேலைவாங் கும் அரசனது வீரர்கள் அடைபடாதிருக்கும்பாகம் யாவ ருடையதென்று மற்ற வேலையாட்களை விசாரித் தறிந்து, 'வந்திக்குக் கூலியாளாய் வந்தவன் நீதானே!' யென்று சினங்கொண்டு அன்புவடிவாஞ் "சிவபெருமானை—சொக்க லிங்கக் கடவுளை—மீனாட்சி பாகனை" அடிப்பதற்குப் பிரம் பை யோங்கவும், அங்ஙனம் பரமன் பயந்து மயங்கி நிற் பதுபோல வேலைவாங்கும் வீரர்களான தலைவர்களை மதி யாமல் இறுமாப்புடனே நிற்பாராயினர்.

இவ்விதமாக வந்தியின் கூலியாளாகிய வள்ளற் பெரு மானிடம் வேலைவாங்கும் வீரர்கள் விசாரித்து சின முற்றிருக்குங் காலத்தில் வைகை நதியில் வெள்ளம் பெரு கிவந்து அடைபடாம லிருக்கும் வந்தியின் பங்குக் கரை யுடனே அடுத்தாப்போலுள்ள அடைபட்ட கரையுங் கரை

வித் கரைத்துக்கொண்டு போயிற்று. அதுகண்ட வேலைக் காரர்களெல்லாம் திகைப்புற்று ஒவ்வொருவராய்ப் பின் வருமாறு பேசலுற்றார்கள்.

வந்தியின் கூலியாளாகவந்த இவன் சித்தனோ என் பர் சிலர், வந்தியை ஏமாற்றிப் பிட்டுத் தின்னவந்த எத் தனோ என்பர் சிலர், பேய்பிடித்த பித்தனோ என்பர் சிலர், அல்லது இந்திரஜால வித்தையைக் காட்டும் புரட்டனோ என்பர் சிலர், வேறு சிலர் பண்ணுடனே கூடிய பாடலுக் குத் தகுந்தாப்போல் நடிக்கும் நாட்டியக்காரனோ என்பர், சிலர் ஐயோ! இவனை இன்னவனெனத் தெரியவில்லை என் பார்கள், சிலர் செல்வச் செருக்கிலே யிருந்து பின் செல் வத்தை யிழந்த காரணத்தால் வறுமையி லீடுபட்ட தரித் திரனோ வென்று கூறுவார்கள், அல்லது தாய்தந்தைய ரில் லாத தனியனோ வென்பார்கள் சிலர், சிலர் இவனைப்பார்த் தால் மன்மதனுங்கண்டு நாணங் கொள்ளத்தக்கப் பேரழகு வாய்ந்தவனா யிருக்கின்றானாதலால் இவன் யாருடைய புத் திரனாக விருக்கலா மென்பார்கள், இவன் ஒரு வேலையுஞ் செய்தறியாதவனைப் போற்றோன்றுகின்ற தென்பார்கள் பலர், அல்லது பித்தம்பிடித்த கள்வனோ வென்பார்கள் சிலர், இவன் ஏன் வந்தியினிடம் வேலை செய்வதாக கூலி வாங்கிக்கொண்டு வந்து கணக்கிலே தன் பெயரை பதிவு செய்துகொள்ள வேணுமென்பார்களும், வேலை செய்யச் சொன்னாலும் கேளாத மூர்க்கனைப்போலத் திரிகின்றானே எனவும் பலர் சொல்லிக்கொண்டு நாம் இச்செய்தியை அரசனுக்கு அறிவிப்போமென்று பாண்டியன் வீற்றிருக் குஞ் சபையிலே சென்று வணங்கி, "ஐயா அரசர் பெரு மானே! வைகை நதி வெள்ளப் பெருக்கா லுண்டான உடைப்பைப் பட்டினத்துக் குடிகளெல்லாம் அளந்து

விட்ட பிரகாரம் ஒப்புக்கொண்டு அவரவர்களும் தங்கள் தங்கள் பங்குகளை கரைகட்ட மண் சுமந்தடைத்தார்கள். ஆனால், இவ்வூரிலே வக்குவ முனிவருடைய மைந்தருக்குள் அழகும் உண்மையும் பொருந்திய மண்ணுடையான் என்னும் முனிவருடைய மரபைச்சார்ந்த வணிக வைசிய குலத்திலே பிறந்த வந்தியென்னும் பெயருடைய கூனற் கிழவி யொருத்தி யிருக்கின்றாள். அவள் பிட்டுசுட்டு விற்கிறவள். அவள் பங்கு மாத்திரம் அடைபடாம லிருக்கின்றது. அவற்றை அடைப்பதற்கென வந்தியின் கூலியாளென்று ஒருவன் வந்து கணக்கிலே பேர் பதியவைத்துக் கொண்ட பின்னர் சிறிதும் வேலைசெய்யாமல் செங்கோல் செலுத்தும் செல்வக் குமாரன் போல் சிரித்து விளையாடிக் கொண்டு ஆடிப்பாடி காலத்தை வீணே போக்குகின்றான். வேலை செய்யவேண்டுமென்கிற எண்ணஞ் சிறிதுமில்லாது வேலைவாங்குகிறவர்களையும், வேலை செய்கின்றவர்களையும் அவமதித் திறுமாப்புற் றிருக்கின்றான். நாங்கள் எவ்வளவு சொல்லியுங் கேளாது தன்னிஷ்டப்படித் திரியும் அவனழகையும், மௌன நிலையையுங் கண்டு பயந்து தங்கட்குத் தெரிவிக்க வந்தோமென்" றுரைத்தார்கள்.

ஏவலாலர்களுரைத்ததைக் கேட்ட பாண்டிய மன்னன் சினங்கொண்டு தனது மந்திரிகளுடனே புறப்பட்டு நாம் போய் பார்க்கலாமென்று வைகை நதிக்கரைக்கு வந்து அடைபட்டிருக்கும் பங்கு கரைகளை யெல்லாம் பார்த்துக் கொண்டு வருகின்றபோது வந்தியினது பங்கை யடைப்பாரில்லாமல் அந்தப் பங்கும் அதற்கடுத்த பங்கும் அலைகளால் குத்தி யிடித்துக்கொண்டு போகின்ற வெள்ளப் பெருக்கைப் பார்த்து முன்னினும் அதிக கோபங்கொண்டவனாய் இந்தப் பங்கை யடைப்பதற்காக வந்த கூலியாள்

எங்கே? என்று விளித்தான் பாண்டியராஜன். அப்போது சேவகர்கள் பயந்து தங்களிறைவனான பாண்டியனிடம் உலகெலாங் காக்கும் முழுமுதற் கடவுளான இறைவனை வந்தியின் வருத்தமகற்ற வந்த வள்ளற்பெருந்தகையைப் பிடித்திழுத்துக்கொண்டு போய் இவன்றான் வந்திக்காக வந்த கூலியாளெனக் காட்டினார்கள்.

அவ்விதம் காட்டலும் பாண்டியன் கோபமிக்குற்றுத் தன் கரத்திலிருந்த பொற்பிரம்பினால் அண்டங்களையும் அதிலுள்ள சகல உயிர்களையும் தனக்குச் சரீரமாகக் கொண்டு விளங்கும் முதல்வனான கடவுள் முதுகிலே ஓங்கி யடித்தான்.

அவ்விதம் பாண்டியராசன் அடித்தவுடனே நிலமெலாம் நிறைந்த நிமலன் தாம் கொண்டுவந்த கூடையோடு மண்ணை ஆற்றின் உடைப்பிலே கொட்டிவிட்டுமறைந்தார். மறைந்த மாயாசித்தனாகிய கடவுள் முதுகிலே பாண்டியன் அடித்தத்தழும்பு பாண்டியன் முதுகிலும், அவன் பத்தினிகளுடம்பிலும், மந்திரிகளுடம்பிலும், இராஜகுமாரர்கள் மேலும், அவண் குழுமியிருக்கின்ற வீரர்கள் மேலும், குதிரைகள்மேலும், யானையின்மேலும் பட்டதன்றி, நவக்கிரகங்களின்மேலும், பல நட்சத்திரங்கள்மேலும், ஐந்து பூதங்களின்மேலும், மேகங்கள்மேலும், வேதங்கள்மேலும், ஆறுசமய தேவர்கள்மேலும், மற்றைத் தேவர்கள்மேலும், இருடிகள்மேலும், அடியார்களான முனிவர்கள்மேலும் பட்டதல்லாமலும், வானவர், மனிதர், நரகர், பட்சிகள், விலங்குகள், பாம்பு, கறையான், எறும்பு முதலான சகல உயிர்கள்மேலும், மலை, மரம், கொடி, புல் முதலான வதரங்கள் மேலும் பட்டன. தாயினது வயிற்றிலுள்ள பிள்ளை

யும் அப்போதடிப்பட்ட தழும்புடனே பின்னரும் பிறக்கலாயின. சராசரங்களும் தாமேயாமென விளங்கும் கடவுள்மேலே பட்ட அடித்தத் தழும்பானது உயிரற்ற சித்திரங்கள் மேலும் பட்டன வென்றால் வேறெங்குதான் படவில்லையெனப் பகரமுடியும்?

இவ்விதம் இறைவன் முதுகிலே பாண்டியன் அடித்த வுடனே பாற்கடலிற் றுயில்செய்யும் மாயோன் திடுக் குற்று விழித்தான். பதுமாசனத்தி லுறைகின்ற பிரமன் இஃதென்னவென் றதிசயித்தான். இந்திரன் பயந்து நடுக்குற்றான். மற்றைத்தேவர் முனிவர்க ளெல்லாம் உடல் நடுங்கிப் பயந்தார்கள். விஞ்சையர், இயக்கர், சித் தர், சாரணர்க ளெல்லாம் உடம்பிலே அடித் தழும்புறப் பெற்றார்கள். அவ்விதம் பட்ட அடித்தழும்பை ஒருவருக் கொருவர் காட்டிப் பட்டவித மறிய வியலாது மயங்கித் தியங்கினார்கள். அக்காலத்தில் தனக்கொப்பாரும் மிக் காரு மில்லாத சோமசுந்தரக் கடவுள் சகல உயிர்களும் தாமே யென்பதூஉம், அன்பினுக்கிரங்கு மெளியோ ரென் பதூஉம் தன்னைத் தண்டித்த பாண்டியனுக்குத் தெரிவிப் பான் வேண்டி அடிபட்டு அங்கே ஒரு கூடை மண்ணைக் கொட்டியும், நதியிற் பெருகிய வெள்ளத்தை வற்றச்செய் தும், உடைப்பட்ட கரையை யுயர்த்திவிட்டு உடனே வேலையினின்று நீங்கி மறைந்துபோனதைக்கண்டு அதிசய முற்று பாண்டியராசனது ஏவலாளர்களான வீரர்கள் வந்தியிடஞ் சென்று வாதித்தார்கள்.

அது போழ்து, வந்தி இன்னம் அரசனால் தனக்குத் துன்ப மேதேனு முண்டாகுமோ வென்றஞ்சிப் பயமிகக் கொண்டு முன்னே நாமனுப்பிய ஆள் போனவன் என்ன

செய்தானோ! இனி என்னாலே என்ன செய்யமுடியுமென்று மனந் தளர்ச்சியுற்று கூடலம்பதிக் கடவுளை மனத்திலே நினைத்து நின்றழுதாள்.

அவ்விதம் அமலன்பா லன்பு முதிர்ந்து கனிந்து மன முருகி யழும் வந்தியின்பால் அன்பே வடிவினராய சோம சுந்தரக் கடவுள்—முன்னம் வந்தியினிடம் பிட்டமுதருந் திய முழுமுதற் பெருமான் தமது பெருங்கருணையினாலே நந்தி முதலிய கணாதிபர்கள் சூழ உடனே ஆகாயத்திலே விளங்குகின்ற ஆதவன்போல பிரகாசிக்கும் திவ்விய விமா னத்தைப் பூமியின்கண் இறங்கச்செய்து, "சற்குணம் நிறை ந்த தாயே வருக! வந்தியெனும் மாதாவே வருக! அன்பு முதிர்ந்த அன்னையே வருக! சஞ்சலமுறுந் தாயேவருந்தே" லென்று விமானத்தின் மேலேற்றிக் கொண்டு விரைவாக தேவர்கள் பூ மழை பொழிய, பண்ணோடுகூடின பாட்டும், வேதமுழக்கமும், ஐந்து துந்தியும் வானத்திலே முழங் கச் சிவ சாயுச்சியம் பெற்றவர்க ளுறைக்கின்ற சிவலோகம் போய்ச் சேர்ந்தனள் வணிக வைசியகுல திலகவதியாம் வந்தியம்மையார்.

அதன் பின்னர் வெள்ளியம்பலவாணர் ஒரு கூடை மண்ணைக்கொட்டி மறைந்ததும், அடைபட வேண்டிய கரை நீண்ட மலைபோலுயர்ந்தும், அம்பலவாணரை அடி த்த அடி ஒவ்வொருவர் மேற்பட்டதும் கண்டதிசயித்து அங்குள்ளாரனைவரும் அடி என்மீதும் பட்டது என் மீதும் பட்டது என்று மந்திரி முதலானோர்கள் சொல்லிக் கொள்வதும், பாண்டிய மன்னனும் இவ்வதிசயத்தைக் கண்டுத் திடுக்குற்று நின்றனன்.

அங்ஙனம், ஆதியங்கடவுளான வெள்ளியம்பலவாணர் ஆகாயத்திலே நின்று பாண்டிய ராசனையும், அவன் சேனைகளையும் பார்த்து, "ஓ, பாண்டிய மன்னனே! நீ தேடிய திரவியங்களெல்லாம் தருமநெறி வழியே வந்தனவாதலால் அப்பொருட்களெல்லாம் மிக பரிசுத்தமாகவே எனக்கும், என்னைச் சூழ்ந்த அடியார்களுக்கும் வாதவூரன் உதவும் படியாகச் செய்தனன். நீ இவ்வுண்மையை யுணராமலும், வாதவூரன் பெருங்குணத்தை யறியாமலும் அவனைத் துன்பத்திற் குட்படுத்தினை. அதனாலே நாம் நம்மிடத்தி லன்புமிக்குற்ற வாதவூரன் படுந்துன்பத்தைத் தலைப்பான் வேண்டி நரிகளைக் குதிரைகளாகச் செய்து உம்மிடங் கொண்டுவந்து கொடுத்தோம். அப்பரிதிக ளெல்லாம் நடு இராத்திரியில் முன் போலவே நரிகளாய்ப் போயின. அது கண்டும் நீ வாதவூரன் பெருமையை யுணராமல் மீண்டும் அவனை அவதிக்குட் படுத்தினாய். அஃதறிந்த நாம் மனம் பொறுமல் வைகை நதியைப் பெருகிவரும் படியாகச் செய்தனம். அவ்விதம் வைகை யாற்றைப் பெருகிவரச் செய்தும் அதனால் உடைப்புண்டாக வதனை யடைப்பதற்கு வந்தியிடம் கூலியாளாய் அமர்ந்து அவள் கொடுத்தப் பிட்டை வாங்கித் தின்று வந்து வேலையிலமர்ந்து உன்னாலே பிரம்படியும் பட்டோம். உடனே வந்தியின் பங்கு அடைபடுமாறு நாமே மண்ணைக் கொட்டிக் கரையைச் சரிப்படுத்தி வந்திக்கு வந்த துன்பத்தையும் போக்கி யவளை நமது சிவலோகஞ் சேரவுஞ் செய்தனம்" என அசரீரியாக ஒலி யெழுப்பினர்.

இவ்விதமாக சர்வஜீவதயாபரக் கடவுள் தமதருளினாலே பாண்டிய நாட்டை அணிபெறச் செய்யும் மதுரை மாநகரத்திலுதித்த வணிக வைசியகுல திலகவதியான

வந்தி யம்மையாருக்குச் சிறந்த சிவ சாயுச்சிய பதவியும், அம்மரபினர்க்கு என்று மழியாத கீர்த்தியையும் தமது பெருங் கருணையால் நிலை நாட்டினர்.

---

## வாழி விருத்தம்

பொன்னவிர் பதியா யென்றும் பொலிவுறு மதுரை வாழி
மின்னவிர் மதிரு டண்ணல் விமலன்பொற் றாள்கள் வாழி
துன்னவிர் நலமார் வந்திஇ தூயசுற் புகழும் வாழி
நன்னவிர் வணிக ரெல்லா நானிலம் வாழி வாழி.

வந்தியம்மையார் சருக்கம் முற்றிற்று.

---

குறிப்பு :—

சந்திர சடாதர மூர்த்தியாம் சோமசுந்தரக் கடவுள் தமது அடியார்களுய்யும் வண்ணம் மதுரைமா நகரத்திற் செய்தருளிய திருவிளையாடல் அறுபத்து நான்கினுள் பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடலானது உலகப் பிரசித்தியாக விளங்குகின்றது. சிவபெருமான் தமது பக்த சிரோமணியாகிய ஸ்ரீமக் மாணிக்கவாசக சுவாமிகளின் பொருட்டும், வணிகவைசியகுல திலகவதியாம் வந்தியம்மையின் பொருட்டுமாகச் செய்தருளியத் திருவிளையாடல் மஹோற்சவத்தை மதுரையின் கண்ணேயும், மற்றுமுண்டான சிறந்த ஸ்தலங்களாகிய சிதம்பரம், மேலைச்சிதம்பர மென்னும் திருப்போரூர், பொள்ளாச்சி முதலிய விடங்களில் காளிது வரையிலும் அம்மஹோற்சவம் வணிக வைசிய குலத்தினர்களால் நடைபெற்று வருகிறது. மேலும், இவ் வணிக வைசியர்களாகிய ஆயிரங்கோத்திரத்தார் பலவகை

யிலும் சமயாசார ஒழுக்கங்களைக் கைப்பற்றி உற்சவாதி களையும் நடாத்திவருகின்றார்கள். ஆகவே, இதைக் கண் ணுறும் வணிக வைசியகுல சகோதரீ சகோதரிகள் முன் னோர் நின்ற வழிநின்று குல முன்னேற்றத்தைக் கருதி யுழைப்பார்களாகுக!

---

## ஆயிரங்கோத்திரத் திருநாம விளக்கம்

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

வக்குவமா முனிவனொடு மங்கை பங்கன்
மலையரையன் றருமடந்தை கங்கை துங்கச்
சக்கரஞ்சேர் கரதலத்தோன் செய்யாள் வெள்ளைத்
தாமரையோன் கலைமகளும் வசும ருத்தூஉ
வக்கணியுங் கடவுளிரு புதல்வர் துர்க்கை
மார்த்தாண்டன் மதியிடையி லுடையுள் ளோர்கள்
இக்குடையோ ரவரவர்கண் முனிவ ரன்பாற்
செறித்தபெய ராயிரமுந் தெரியச் சொல்வாம்.

இதன் பொருள்:—வக்குவமா முனியோடு பரமசிவ னும், மலையரையன் பெற்ற மகளாகிய பார்வதியும், சிவ பெருமானது அழகிய சடைமுடியின்கண் விளங்கும் கங் கையும், வலியச் சக்கராயுதம் பொருந்திய கரங்களை யுடை யோனாகிய திருமாலும், இலட்சுமியும், வெள்ளிய தாமரை யிலிருப்பவனாகிய பிரமனும், சரஸ்வதியும், அட்டவசுக்க ளும், மருத்துக்களும், எலும்பை யணிந்த பரமசிவனுடைய இரண்டு புத்திரர்களாகிய விநாயகரும், சுப்பிரமணியரும் துர்க்கையும், சிறந்த சூரியர் சந்திரர்களும், அவர்களிடை

யிலுள்ள செவ்வாய் முதலிய மற்றவர்களும், அட்டத் திக்குப் பாலகர்களும், முனிவர்களுமாகிய அவர்கள் விருப்பப் படியே யிட்ட ஆயிரம் பெயர்களையுந் தெரியச் சொல்லுவோம் என்றவாறு.

அ

1 அரசபையன்
2 அத்திக்கிழான்
3 அரும்பந்தை
4 அறுகிழான்
5 அரசங்கிழான்
6 அருவிக்கிழான்
7 அரிவைக்கிழான்
8 அரம்பந்தை
9 அநந்தல்கிழான்
10 அல்லிக்கிழான்
11 அவந்திக்கிழான்
12 அரும்பைக்கிழான்
13 அணிக்கிழவன்
14 அம்பிக்கிழான்
15 அம்பலுழான்
16 அச்சுவாணிபன்
17 அண்டலுழான்
18 அதிசெயவண்ணான்
19 அம்புவிக்கிழான்
20 அம்பல்கிழான்
21 அம்பலங்கிழவன்
22 அரசடையான்
23 அறுவாணிபன்
24 அடையுடையான்
25 அச்சமான்
26 அமார்க்குரமுடையான்

ஆ

27 ஆலந்தை
28 ஆவந்தை
29 ஆட்குன்றன்
30 ஆறைக்கிழான்
31 ஆலம்பிரியான்
32 ஆறுடையான்
33 ஆத்தலுழான்
34 ஆர்த்தமுடையான்
35 ஆரியவாணிபன்
36 ஆமங்கிழவன்
37 ஆழிக்கிழான்
38 ஆலங்குடிக்கிழான்
39 ஆடைக்கிழான்
40 ஆற்றுழான்
41 ஆலங்காட்டுடையான்
42 ஆரணைக்கேள்வன்
43 ஆலத்தூருடையான்
44 ஆலைக்கிழான்
45 ஆவுவுழான்
46 ஆடுடையான்
47 ஆறுமுடியான்

இ

48 இருக்கைக்கிழான்
49 இசைப்பேரான்
50 இமையவண்ணான்
51 இரும்பந்தை

52 இளங்கிழவன்
53 இளவேட்டன்
54 இருங்கண்டி
55 இளம்பூதி
56 இளந்தாமன்
57 இளந்திரையன்
58 இளையான்
59 இங்கிதமுழவன்
60 இல்வணந்தை
61 இளவைக்கிழான்
62 இளந்தத்தன்
63 இல்லங்கிழான்
64 இயமங்கிழான்
65 இந்திரப்புரவன்

ஈ

66 ஈஞ்சூர்க்கிழான்
67 ஈர்க்குறுவண்ணன்
68 ஈகைக்கிழான்
69 ஈவணன்

உ

70 உருத்திரப்பட்டன்
71 உள்ளங்கிழான்
72 உஞ்சைக்கிழான்
73 உதயமுழான்
74 உரோமபட்டன்
75 உலகந்தை
76 உழூவையுழான்
77 உத்திரங்கிழவன்
78 உரோமமுனி
79 உறைவிடத்தான்
80 உரகனுழான்
81 உருவந்தை
82 உத்திரக்குடையான்
83 உழக்கினியன்

ஊ

84 ஊற்றூர்க்கிழான்
85 ஊதியச்செல்வன்
86 ஊழிக்கிழான்

எ

87 எந்திமங்கலவன்

ஐ

88 ஐயுறுவண்ணன்

ஒ

89 ஒப்பமுழான்
90 ஒளிவலவன்
91 ஒல்லிக்கிழான்

ஓ

92 ஓதல்கிழான்
93 ஓங்கனுழான்
94 ஓலைக்கிழான்
95 ஓசைக்கிழான்
96 ஓதிமங்கிழவன்
97 ஓமங்கிழான்

க

98 கண்ணபுரவன்
99 கபாலன்
100 கலிப்பலியன்
101 கவணியன்
102 கபிலன்
103 கண்ணவாணிபன்
104 கருமணிக்கிழான்
105 கஞ்சக்கண்ணன்
106 கற்பமுழான்
107 கடையுடையான்
108 கடவுளான்
109 கலிங்கமுழான்

110 கனகந்தை
111 கற்பாக்கிழான்
112 கடம்புடையான்
113 கதிருழான்
114 கடந்தைவாணிபன்
115 கண்ணிக்கிழான்
116 கண்ணைசாத்தன்
117 கணங்கிழான்
118 கருஞ்சினிக்கிழான்
119 கண்டிப்புரவன்
120 கருங்கண்ணன்
121 கடம்பந்தை
122 கண்டமுழான்
123 கள்ளிப்புறவன்
124 கட்டவங்கையன்
125 கடுஞ்சிலன்
126 கன்னிக்கிழான்
127 கச்சிப்புறவன்
128 கதலிக்கிழான்
129 கண்ணபுரமுடையான்
130 கங்கைக்கிழான்
131 களந்தைக்கிழான்
132 கற்பூரவணிகன்
133 கருவந்தை
134 கணம்பாக்கிழான்
135 கடைகாப்பான்
136 கடுவளஞ்சாத்தன்
137 கலைவணந்தை
138 கருவிலிக்கிழான்
139 கழுக்குன்றமுழான்
140 கஞ்சுதிரன்
141 கன்னுபுரமுடையான்
142 கல்லாறுழவன்
143 கறையோரன்
144 கஞ்சாரன்
145 கந்துகண்ணன்
146 கடுவேட்டன்
147 கருஞ்சாத்தன்
148 களமுழான்
149 கடுவந்தை
150 கரும்பந்தை
151 கடன்மல்லையுடையான்
152 கண்ணந்தை
153 கடுவெண்ணி
154 கண்ணக்கன்
155 கருமுல்லைக்கிழான்

கா

156 காரணவண்ணன்
157 காரிசாத்தன்
158 காமக்கண்ணன்
159 காடுக்கிழான்
160 காட்டுவாணிபன்

(இன்னும் வரும்)

---

# திருக்கச்சி நம்பிகள் சருக்கம்

## கச்சித் தேவராஜப் பெருமாள் கருணைப் பிரபாவம்

பூவிருந்த வல்லிநக ரத்திற் * செட்டி
　　புரிந்துவாழ் வீரரா கவர்த மக்கு
மூவருக்குப் பின்னாக முளைத்துத் தந்தை
　　முதலாகத் தொழிற்குதவத் தந்த பொன்னைத்
தூவுருவர் ததியாரா தனத்திற் போக்கி
　　துறந்துகுடி செங்கழுநீர் வழீஇ நடந்து
காவுடைய கச்சிநகர் தனிலே புக்கு
　　கதிநீயே அருளாளா வென்றோய் போற்றி.

## திருக்கச்சி நம்பிகளைப் பெற்றோர் வரலாறு

விங்குகட லுடுத்த வியன்கண் ஞாலத் தோங்கு செந்தமிழ் நிலவும் நந்தமிழகத்தில் பன்னுதண் பொழிலும், வாவியும், மதிலும், மாடமாளிகையும், கூடகோபுரமும் தென்னன் தொண்டையர்கோன் செய்த நன்மயிலைத் திருவல்லிக்கேணியாகிய சிவவிஷ்ணு க்ஷேத்திரங்களுக்கு மேற்கே ஒரு யோசனை தூரத்திலே,

---

* செட்டி-சிக்கனம், இது வணிகருக்குரியது. ஈண்டு, திருக்கச்சி நம்பிகள் வணிக வைசிய மரபினராதலின் "செட்டி" எனக் கூறியதாம்.

"உலகு மழிசையு முள்ளுணர்ந்து தம்மில்
புலவர்புகழ்க் கோலாற் றூக்க—உலகுதன்னை
வைத்தெடுத்த பக்கத்தெம் மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது."

என்று சிறப்பித் தோதப்பெற்றுப் பிரசித்தமாய் விளங்கும் மஹீசார புரத்துக்கு (திருமழிசைக்கு) கிழக்கே ஒரு * குரோச தூரத்திலே சிரிய தொண்டைவள நாட்டுக்குத் துலங்கு மணிமுடி போன்றதாய், "படியிடை மாடத் தடியிடைத் தூணிற் பதித்த பன்மணிகளி னொளியால், வெடிபக லிரவென் றறிவரிதாய" என்பதற்கேற்ப, குற்றமற்ற மாமணி மயங்களான மாடமாளிகை சூழ்ந்து, பார்ப்பதற்கு அழகுவாய்ந்த பூவிருந்தவல்லி என்கிற மாநகரத்திலே, சதுர்முகத் தேவனுடைய திருத் துடையிலே யுற்பத்தியான வணிக வைசிய மரபிலே, நற்பாக்கிழான் கோத்திரத்திலுதித்த சிறந்த வைகுந்த வாசனை போற்றுகின்ற மகானுபாவராய் வீரராகவர் என்னு மழகிய திருநாமத்தையுடைய பெரியாரொருவ ரிருந்தனர்.

இப்பெரியார் வாய்மை, பொறுமை, தயை, பக்தி, விசுவாசம், பொருமையின்மை, சுத்தி, மங்களமுடைமை, லோபத்தனமின்மை ஆகிய அருங்குணங்களைக் கொண்டு விளங்கிய இவருக்குப் பொருந்திய வாழ்க்கைத் துணைவி

---

* அங்குலம் அறுநான்காகும் அதுகரம் கரம் ஓர் நான்கு
தங்குதல் தனுவென்றாகும் தனுஇரண்டாவது ஓர் தண்டம்
இங்குறு தண்டமான இராயிரம் குரோசத்தெல்லை
பங்கமில் குரோசம் நான்கோர் யோசனைப் பாலதாமே.

இதன் பொருள்:—அங்குலம் இருபத்து நான்குகொண்டது கரம். கரம் நான்கு கொண்டது தனு. தனு இரண்டு கொண்டது தண்டம், தண்டம் இரண்டாயிரங் கொண்டதுகுரோசம். குரோசம் நான்கு கொண்டது யோசனை என்றவாறு.

யாம் கமலை என்கிற திருநாமத்தை யுடையாரான கற்புக் கரசி, மனைமாட்சிக்குரிய நற்குண நற்செய்கைகளை யுடையராய், தமதரிய புருஷனோடு கூடி ஊசியும் நூலும் ஒருவழிச் செல்வதுபோல இல்லற தருமத்தைக் குறைவில்லாமல் செய்துவந்தபடியால் இவர்கள் குடும்பம் மிகச்சிறந்து விளங்கிற்று. அங்ஙனம் சிறந்து விளங்கும் நன்னாளிலே வீரராகவர் செய்த நற்றவப்பயனால் கமலையின் திருவயிற்றில் கருத்தரிக்கவும், அதற்கனு குணங்களான தோற்றங்கண்டு கருப்பமுற்ற கமலையைப் பாதுகாத்து வருங்காலத்திலே கமலை ஒரு புத்திரனைப் பெற்றெடுத்தனள். அங்ஙனம், கமலையின் கணவராகிய வீரராகவரும் பிறந்த புத்திரனுக்குச்* சாதக கர்மாதிக் கிரியைகளைச் செய்து, பிரசவ சூதக

---

* சாதக கர்மாதிக் கிரியைகளாவன :—“ சாதகர்மம், நாமகரணம், அன்னப்பிராசனம், சௌளம், உபநயனம் ” என்பவைகளாம். இவற்றுள் சாதகர்மமாவது—பிறப்பைக் குறித்துச் சிசுவுக்குச் செய்வதோர் வைதிக சுத்தி; அதாவது,—நெய், தேன் ஆகிய இவ்விரண்டுங்கூட்டி அதில் மந்திர பூர்வகமாய்ப் பொன்னை யுரைத்துப் பிறந்தவுடனே அச்சிசுவுக்கு நாவிற் றடவுவது. நாமகரணமாவது—பெயரிடுதல், அதாவது,—குழந்தை பிறந்த பத்தாவது நாள் அல்லது பன்னிரண்டாவது நாளில் செய்யப்படவேண்டும். அன்னப் பிராசனமாவது—சோற்றை யுண்பித்தல், இது குழந்தை பிறந்த ஆறாவது மாதத்திற் செய்யப்பட வேண்டியது. சௌளமாவது—குடுமி வைத்தல், இது குழந்தை பிறந்த வருடத்திலாவது அல்லது மூன்றாவது வருடத்திலாவது செய்யப்படவேண்டியது. உபநயனமாவது—பூணூல் தரிப்பித்தல். இது குழந்தை தாயினது கருப்பத்திலிருந்தது முதல் எட்டாவது வருடத்தில் பிராமணனுக்கும், பதினோராவது வருடத்தில் க்ஷத்திரியனுக்கும், பன்னிரெண்டாம் வருடத்தில் வணிக வைசியனுக்கும் செய்யப்படவேண்டியதாம். இங்ஙனம், பிரம்மதேஜஸ்ஸை விரும்புகிற பிராமணனுக்கு ஐந்தாவதாண்டிலும், பலத்தை விரும்புகிற க்ஷத்திரியனுக்கு ஆறாவதாண்டிலும், பொருளை விரும்புகிற வணிக வைசியனுக்கு எட்டாவதாண்டிலும் உபநயனம் செய்யத்தக்கதாம்.

கங் கழிந்த பின்னர் பிறந்தவப் பிள்ளைக்கு வணிக வைசியர் திருவேங்கடவர் என்று திருநாமஞ் சூட்டினர். திருநாமம் சூட்டப்பெற்றக் குழந்தையைச் சீராட்டிப் பாதுகாத்து வளர்த்துவருங் காலத்தில் மீண்டும் இரண்டு மூன்று வருடங்களில் மற்றொரு குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு அருள்கூரப்பன் என்கிற திருநாமத்தைச் சாத்தினர். பின்னும் சில வருடங்கள் கழித்து ஒரு புத்திரன் பிறந்தான். அப்புத்திரனுக்கு மலைகுனியநின்றான் என்கிற திருநாமத்தைச் சூட்டினர் வீரராகவ வணிக உத்தமர்.

---

## திருக்கச்சி நம்பிகள் உற்பவம்

---

"உரைப்பார் உரைக்கும் உரையாவும் புகழில் வைத்தான்."

—சிவப்பிரகாசர்.

வணிகவைசிய குலோற்பவராகிய வீரராகவ பெருந்தகையார் தன் பத்தினியாகிய கமலையுடன் இனிது வாழ்ந்து மூன்று புத்திரசிகாமணிகளை யீன்றெடுத்து வளர்த்து வருங் காலத்திலே, சர்வலோக சரண்யனாய் ஸ்ரீ வைகுண்ட நிகேதனனான ஸ்ரீமந் நாராயணன் தன்னடியார்களைத் திருத்தும் கருணையுடன், "வைகுந்தத் தமரரும் முனிவரும்" என்று சொல்லப் பெறுகிற அநந்தமில் பேரின்பத் தடியார்களிலே ஒருவரான ஸ்ரீசேனைபதியாழ்வாரைக் குறித்து நீர் இருள்மிகும் பூவுலகத்திலே மானிடப் பிறவியிலே அவதரித்து, அறியாமை யென்னும் அந்தகாரத்திலே ஆழ்ந்து அளவிலா சிற்றின்பத்திலே மூழ்கிக் கிடக்கும் சம்சார சேதனர்களைக் கரையேற்றி வாருமென்று கட்டளையிட்டார். அங்ஙனம், ஸ்ரீசேனைபதி

யாழ்வாரும் எல்லாமுணருங் குணமும் ஞானமும் வாய்ந்த முனிவராகையாலே, ஸ்ரீமந் நாராயணனுடைய கட்டளையைச் சிரமுற்று, பூவிருந்த வல்லியிலே வாழும் புனிதரான வீரராகவரைத் தமக்குப் பிதாவாக அரும்மணிபோல் வாழும் வீரராகவ வணிக சிகாமணியை பிதாவாகக் கொண்டு சகஸ்திர கோத்திரம் வாய்ந்த வணிக வைசிய மரபில் கமலையின் வயிற்றிலே பிரவேசித்தார்.

அங்ஙனம், ஸ்ரீ சேனுபதியாழ்வார் ஸ்ரீமந் நாராயணனது கட்டளையின்படி பிரவேசிக்கவும், ஒருதினம் வீரராகவர் தன் பத்தினியுடன் "கருத்தொருமித் தாதரவுபட்டதே இன்பம்" என்பதற்கிணங்கி கலந்து மகிழவும், அங்ஙனம் கமலையும் கர்ப்பமுற்றாள். அப்போது கமலை முன்புற்ற கர்ப்பங்களைப்போ லல்லாமல் இக்கர்ப்பம் ஆச்சரியப்பட்த்தக்கதாக விளங்கக்கண்ட விசேடத்தைப் பந்துக்கள் கமலையின் கர்ப்பத்தால் ஏதோ ஒரு மகத்தான விசேடமுண்டாகுமென்றார்கள். வீரராகவரும் தன் பத்தினியின் கர்ப்பத்தால் உலகத்துக்கு நன்மை பயக்கும்படியான அதியற்புத முண்டென்றும், அதற்கு யோக்கியமான புத்திரனே பிறப்பானென்றும் உறுதிகொண்டு சந்தோஷமடைந்திருந்தார்.

அவ்விதம் மகிழ்வுற்றிருக்குங் காலத்திலே, பாரத நாட்டின் பாக்கியமென சகவருடம் 93-க்கு மேற்செல்லுகின்ற சௌமிய வருடம், மாசி மாதம், சுக்கிலபட்சம், தசமி திதி, வியாழக்கிழமை, மிருகசீரிட நட்சத்திரங்கூடிய சுப தினத்திலே, இரடப லக்கினத்திலே, "பருவம் நிரம்பாமே பாரெலாமுய்ய, திருவின் வடிவொக்குந் தேவகிபெற்ற" என்று கூறுவதற் கிணங்கவும், "இவர்தந்தை என்னோற்றான்

கோல்!" என்னுஞ் சொல்லிற் கிணங்கவும், மக்களின் அந்தகாரத்தையோட்டும் பரமஞானியாகவும், வணிகவைசிய குலத்தில் திருக்கச்சி நம்பிகள் தோன்றினர்.

அதுபோழ்து வணிகவைசிய குலோற்பவராகிய வீர ராகவர் அதிக சந்தோஷமுற்றவராய் ஸ்நானம்பண்ணி, கோதான முதலிய பலதானங்களையும் சற்பாத்திரமறிந்து செய்து, பிறந்த குழந்தைக்கு சாதககர்மத்தையும் விதி முறை வழுவா தியற்றி, பன்னிரண்டாநாள் அநேக ஸ்ரீ வைஷ்ணவர்களைச்சேர்த்து, சிசுவுக்கு மேல்வருதா னப் பேரருளாளர் திருவடிகளிலே கைங்கரியத்துக்கிடா கத் திருக்கச்சிநம்பி யென்று திருநாமஞ் சூட்டினர்.

அதன்பின்னர் வணிக வைசியராகிய பால திருக்கச்சி நம்பிகள் அதிதேஜஸ்ஸாயும், அத்தியந்த மேதாவியாயும், சுக்கிலபட்ச சந்திரனைப்போல வளர்ந்தும், குணவொழுக் கத்தாலே தன் பிதா வீரராகவருக்கும், மற்றுமுள்ள பெரி யார்களுக்கும் ஆனந்தத்தை உண்டுபண்ணிக்கொண்டிருந் தார்.

மேலும், "இவனைப்பெற்ற வயிறுடையாள் என்ன நோன்பு நோற்றாள் கொலோ!" என்று உலகத்தினர் கொண்டாடும் வண்ணம் மாதாவாகிய கமலை மனம் மகி ழும்படியும் நடந்துகொண்டார்.

இவ்விதம் நம்பிகளைத் தாய்தந்தையர் சிருஞ் சிறப்பு முறப் பாதுகாத்து வளர்த்துவருங் காலத்தில் நம்பிகள் கல்வி கேள்விகளிற் சிறந்து கலைஞானங்களை யுணர்ந்து, உணர்ந்ததைப் பிறருக்குபதேசிக்கும் பாண்டித்யத்தைப் பெற்று, பிதாவுடனும், உடன்பிறந்தாருடனும் ஒத்த மன முடையவராய் வாணிபத் துறையிலே பழகிவருங் காலத்

திலே, வயது முதிர்ந்த வீரராகவரும் புத்திரர்கட்குத் தகுந்த காலங்களிலே உபநயன கர்மத்தை நிறைவேற்றி, பின்னர் தன்பாலுள்ள பூர்விக தனத்தைத் தனது புத்திரர்களைக்கொண்டு விருத்திசெய்யவும், தாம் உழைப்பினின்று மகன்று இளைப்பாறவு மெண்ணிப் பிள்ளைகளை யழைத்து, "புத்திரர்களே! நான் நமது குலத்துக்குசிதமான வாணிபத்திலே நெடுநாள் உழைத்து வந்தமையாலும், இப்போது எனக்கு வயது முதிர்ந்து விருதாப்பியமானதாலும் இனிமேல் நீங்களே நம்மிடமுள்ள தனத்தைக்கொண்டு பந்துமித்திரர்கள் விரோதமில்லாமலும், காலதேச வர்த்தமானத்தை யனுசரித்தும் நீதிவழுவாமல் வாணிபத்தை நடாத்தி வாருங்கள்! இனி எனக்குச் சிரமபரிகாரத்தைத் தேடுங்கள்!" என்றுகூறி தன்னிடமுள்ள தனத்தைச் சமமாகப் பங்கிட்டுத் தனது புத்திரர்கள் நால்வருக்கும் கொடுத்தார்.

அங்ஙனம், வீரராகவர் புத்திரர்கள் நால்வருள் திருக்கச்சிநம்பிகள் தவிர மற்ற மூவரும் தந்தையால் பகுத்தளிக்கப்பெற்ற தனத்தைக்கொண்டுப் பிதாவினுடைய அனுமதியின்படியே தங்கள் குலத்திற்குரிய வாணிபத்துறையிலே தனத்தைப் பெருக்கிக்கொண்டிருந்தார்கள். திருக்கச்சி நம்பிகளோவென்றால் பகவத் குணாநுபவத்திலீடுபட்டவ ரானபடியினாலே, வணிகத்துறையிலே வெறுப்புற்றவராயும், தனதான்யாதி திரவிய சம்பாத்தியத்திலே நோக்கற்றவராயும், ஸ்ரீ பிரகலாதாழ்வானைப்போல தாமும் ஸ்ரீ பகவத் விஷய சுகபோகத்திலே யீடுபட்டும், தன்னையேயன்றி மற்றையோர்களையும் பகவத் பத்தியுடையவராய்த் திருத்திக்கொண்டும், தனக்குத் தந்தையளித்த தனத்தைப் பகவத்பக்தி நிறைந்த தொண்டர்களுக்கு

ததியாராதனை பொருட்டுச் செலவழித்து கொண்டும், தானும் அப்பக்தர்களுடன் சேர்ந்துகொண்டு பகவத் குணுதிசயங்களையே பேசிக்கொண்டிருந்தார்.

இவ்விதமிருக்குங் காலத்தில் ஒருநாள் நம்பிகளுடைய தந்தையாராகிய வீரராகவர் நம்பிகளது அரும்பெருங் குணுதிசயத்தை அறிந்திருந்தாரேனும், பொதுவாக எல்லா புத்திரர்களையு மழைத்து, "பிள்ளைகளே வாருங்கள்! நான் முன்னம் உங்களுக்குத் தந்த தனத்தைக்கொண்டு அதற்கு மேல் நீங்கள் சாமர்த்தியத்தினலே தேடியதனம் எவ்வளவு? அதை எனக்குச் சொல்லவும், காண்பிக்கவும் வேண்டும்" என்றியம்பினர். அதற்கு நம்பிகளுடன் பிறந்த சகோதரர் மூவரும் தந்தையின் விருப்பப்படியே தாங்கள் தேடியவருமான தனவிருத்தியைக் காண்பிக்க, தந்தையாராகிய வீரராகவரும் கண்டு களிப்புற்று, இளவலாகிய திருக்கச்சிநம்பியை யழைத்து, "நீ சம்பாதித்த தன விருத்தி எவ்வளவு? அது எங்கே?" என்றார்.

அவ்விதம் வினவிய வீராகவருக்கு நம்பிகள் "பெரு நகரிலே சேமித்து வைத்தேன்" என்று பதிலிறுத்தார். அன்னனம் வீராகவருக்கு ஒன்றும் விளங்காமல், "நம்பி! நீ கூறியது ஒன்றும் விளங்கவில்லையே. அதாவதென்ன? சொல்" என்றார். அதற்கு நம்பியும், "வானிளவரசு வைகுந் தக் குட்டன் வாசுதேவன் மதுரை மன்னனுடைய முக மலர்த்தியே புருடார்த்தமாகவெண்ணி நல்ல சாதனமான ததியாராதனத்தைச் செய்தேன்" என்று கூறலும், அது கேட்ட தந்தை வீராகவர் தம்முடைய உள்ளன்பை மறைத்துக்கொண்டு மிக கோபமுற்றவர்போல் நடித்து, நம்பிகளின் நலங்கருதி, "அப்படியானல் நீர் தாதராய்ப்

போகவேண்டும்" என்றியம்பவும், அச்சமயத்திலே நம்பிகளின் மாதாவான கமலை நம்பிகள்பால் மனந்தளர்வுற்றுச் சிறிது தனங்களை நம்பிகளிடங் கொடுத்து, "இத்தனத்தை உம்முடைய பிதாவுக்குக் காண்பித்துத் திருப்திபண்ணி வையும்" எனவும், நம்பிகள் அவ்விதம் செய்வது உசிதமல்லவென்று தாயாருக்குக்கூறி, நன்மை பயக்கும் பிதாவினுடைய வாய்மொழிப்படியே நடக்கவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு, ஒன்றுமில்லாதவராய் தான்பிறந்த பதியையும் கிருகத்தையும் விட்டு திருவல்லிக்கேணியிலே சென்று தெள்ளிய சிங்கமாகிய தேவையும், பார்த்தன் தன்றேர் முன்னின்றானையும், சிற்றவைப் பணியால் முடிதுறந்தானையும், ஆனையின் றுயரந்திரப் புள்ளூர்ந்து சென்றுநின் றாழிதொட்டானையும், வேதத்தின் சுவைப்பயனாகிய மன்னுதனையும், பக்திசாரரையும், பேயாழ்வாரையுஞ் சேவித்து, அத்திருப்பதியிலேயே ஐந்தாறுநாள் எழுந்தருளியிருந்து, பின்னர் தக்கோர் பரவுந் தடஞ்சூழ் ஸ்ரீ பெரும்பூதூர்க் கெழுந்தருளி யாங்கு வாசஞ்செய்துக்கொண்டு, "ஹஸ்திகிரியிலே பேருளாளர் சந்நிதானத்திலே நித்தியவாசஞ் செய்துக்கொண்டு, அயர்வறுமமர்க ளதிபதியாகிய தேவப்பெருமானுடைய திருவடிகளிலே அனவரத கைங்கரியஞ் செய்துக்கொண்டிருக்கும்படியான காலம் எப்போது வாய்க்கும்" என்றுப் பரந்தாமனைப் பிரார்த்தித்துக் கொண்டெழுந் தருளியிருக்கு நன்னாளிலே, பிணியொழித்தமரர் பெருவிசும்பருளும் பேருளாள னெம்பெருமானுன ஹஸ்திகிரியாளர் நம்பிகளுடைய சொர்ப்பனத்திலே தோன்றி, "வாரீர் நம்பி! நம்மூரில் வந்து நம்முடைய திருவடித்தொண்டியற்றி நமது மனோபிஷ்டத்தை யடையும்" என்ன, அன்னம்

நம்பிகள் "தேவரீர் எழுந்தருளியிருக்கும் திவ்விய திருப்பதி எது? தேவரீரது திருநாமமென்ன" என்று வினவலும், அங்ஙனம், நம்பிகள் சொர்ப்பனத்திற் றோன்றிய பரந்தாமன், "நம்மூர் பிரசித்த வைபவமான கச்சிநகர். நாம் உலகத்துக்கே ஆழியான அத்தியூரான் என்ப"வெனலும், அதற்கு நம்பிகள் "அப்படியானுல், நான் உம்முடைய ஊருக்கு வரும்வழியறியேனே"யெனலும், அதற்குப் பேருளாளர் உள்ளமுவந்து "இங்கிருந்து நம்மூருக்குவரப் புறப்படுமமக்கு எவ்வழியிலே செங்கழுநீர் புஷ்பஞ் சிந்திக் கிடக்கிறதோ அவ்வடையாளத்தைப் பார்த்துக்கொண்டு அவ்வழியே நம்மூருக்கு வந்து சேரும்"என்றருளிச்செய்து மறைந்தனர்.

அதன்பின்னர் நம்பிகள் மறுநாட் காலையில் நித்திரை நீங்கி யெழுந்திருந்து சொப்பனத்திற் கண்டவற்றை நினைத்து பரந்தாமனிடத்துப் பதிந்த மனமுடையவராய்க் கச்சிநகருக்குச் செல்லப் புறப்பட, ஆங்கு (வழியிலே) செங்கழுநீர் புஷ்பஞ் சிந்தியிருத்தலைக்கண்டு களித்து, தாம் இராத்திரி சொப்பனத்திற் கண்டது உண்மையே எனத் தெளிந்து மண்திணி ஞாலமும் எழ்கடலும் நீள் விசும்பும் கழியப் பெரிதாலென்கிற காதலுடனே சென்று "பூவியல் பொழிலுந் தடமுமவன் கோயிலுங்கண்டு, ஆவியுள்குளிர" என்கிறபடியே ஆங்குள்ள திருநந்தவனங்களையும், தாமரைத் தடாகங்களையுங் கண்டு உகந்து, "நீசனேன் நிறைவொன்றுமில்லேன்"என்கிற நீசனுன எனக்கு "இத்தகைய புருடார்த்தங் கிட்டுவதோ"வெனச் சந்தேகமுற்று, பக்தி நிறைந்த அஞ்சலியத்தராய் ஓசிந்த நுண்ணிடைமேல் கையை வைத்து நொந்துநொந்து கசிந்த மனத்தினராய்க் கண்ணீர் ததும்பப் பரிசுத்த மனத்தினராய் திருவனந்த

சரஸ்லே (தீர்த்தத்திலே) ஸ்நானஞ்செய்து சுத்த பவித்திராய் கேசவாதித்துவாதச நாமங்களாலே ஊர்த்த புண்டரங்களையும், ப[illegible]வதபிஷேஷ கோபயுக்த ஹரித்ரா சூர்ணத்தையுந் தரித்தருளி ஸ்ரீபலிபீடத்தையும், துவஸ்தம்பத்தையுஞ் சேவித்து, பிரதட்சணமாக திருக்கோயிலுட் புகுந்து, திருவபிடேக மண்டபத்தைக்கண்டு தண்டஞ் சமர்ப்பித்து, திருப்புற்றை வலமாகவந்து, கரிய மாணிக்கத்தாழ்வாரையுஞ் சேவித்து, பிரதட்சணக் கிரமந்தப்பாது பேரருளாளர் பெருந்தேவித் தாயாரையும் திருவடி வணங்கி, "பங்கயத்தாள் திருவருளுங் கொண்டு" என்கிறபடியே சத்விஷயங்களிலே சந்தோஷமிக்கராய் "அத்தியூரான்" என்கிற அழகிய சிங்கரையு மடிபணிந்து, * சேனைபதி யாழ்வாரையுஞ் சேவித்து அவரனுமதியும் பெற்று முக்தனானவன் திருவனந் தாழ்வானைக் காலாலே துகைத்தேறுமாப்போலே சோபான மார்க்கத்தாலே ஹஸ்திகிரியாகிற திருமலையிலேறி கச்சிக்கு வாய்த்தான் என்கிற திருமண்டபமான வையமாளிகையிலே சென்று தண்டன் சமர்ப்பித்து ஜயவிஜயாநுஜ்ஞையாலே, 'பொன்னியலுமாடக் காவடங்கடந்து புக்குமன்னன் திருமார்பும் வாயு மடியிணையும்,பன்னுகரத லமுங் கண்களும் பங்கயத்தின் பொன்னியல் காடோர் மணிவரைமேல் பூத்ததுபோல், மின்னியொளிபடைப்ப வின்னாணுந் தோள்வளையும் மன்னிய குண்டலமு மாரமும் நீண்முடியுந், துன்னுவெயில் விரித்த' மணிமயமான அழகுவாய்ந்த விசேடத்தைக்கண்டு, "என்னுடைய கண்களிப்ப நோக்கினேன்" என்கிறபடியே சேவித்துப் பரந்தாமனிடத்தில் விருப்பமிக்காய் உண்மை

---

* சேனாபதியாழ்வாரே திருக்கச்சிநம்பிகளாகப் பிறந்தன ரென்பது முன்னமே கூறியிருக்கின்றனம்.

சாதித்து, அஞ்சலியஸ்தராய் நின்று 'அடியேனால் இத மறிந்து செய்யத்தக்க தொன்றுமில்லை; சர்வகாரண கர்த்த ரான தேவரீரே ஒருசிதமான கைங்கரியத்திலே அடியேனைப் பிரேரேபித்தருளவேண்டு' மென்று விண்ணப்பஞ் செய் தார்.

இவ்விதமாக விண்ணப்பஞ்செய்து நிற்கும் நம்பிகளுக் குப் பேரருளாளரும் உத்தரவேதியில் அக்கினி மத்தியிலே ஆவிர்ப்பவித் தருளினவரான படியினாலே, அவ்வுஷ்ணம் குற்றமற்ற அடியரான நம்பிகளுடைய அந்தரங்க பக்தி விருத்தியினாலே தணியும் என்கிற திருவுளக் கருத்தினாலே திருவாலவட்ட க் கைங்கரியத்திலே இவரை நியமித்தருளி னார். அவ்விதமே அடியாராகிய நம்பிகளும் அப்படியே, "என்னமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணா வே" என்று சந்தோஷ முற்றாராய் திருவால வட்டத்தைச சேவித்துக்கொண்டிருந்தார்:

இவ்விதமாக நிரந்தர பக்தியுடன் சேவித்துக் கொண் டிருக்கிற காலத்திலே சில சேதனர்களை உய்விப்போ மென் கிற திருவுள்ளங் கொண்டவராய் தேவப்பெருமாள் திரு வாய்மலர்ந்தருளி நம்பிகளுடனே பிரிய வசனங்களை சம்பா ஷணை செய்தருளினார். அங்ஙனம் நம்பியும் தேவப்பெரு மாளுடைய பிரிய வசனங்களைக்கண்டு ஆதியாச்சரியமுற்று அடியேனுடன் இவ்விதம் நடத்தல் பெருமை மிக்க தங்கட் கியன்றதோ வென்று விண்ணப்பஞ் செய்யவும், அதற்குப் பெருமாள் 'நாம் ஒரு பிரயோஜனத்தைக் கருதியே உம் மை இங்கே யழைப்பித்தோம்' என்றருளிச்செய்ய, நம்பி கள் சேமத்தை யெண்ணித் தெளிவுற்றாராய் இருந்தார். பின்பு சிறிது நாட்கள் கழித்து நம்பிகள் பேரருளாளரைக்

குறித்து, 'அடியேனுனக்கு சதாசாரிய ஸ்தானமெங்கே' என்று வினவலும், அதற்குப் பேரருளாளர் நம்பிகள்மீது மிகப்பிரீதி யுடையராய் 'நம்முடைய பெரிய கோயில் (திருவரங்கம்) சென்று பெரிய நம்பி புருஷகாரமாகப் பெரிய முதலியாரைத் திருவடி தொழுது அவர் திருவடிகளிலே பதிந்திரும்' என்றியம்பினர்.

அவ்விதமே நம்பிகளும் மறுநாட் காலையில் பேரருளாளரைச் சேவித்து அவரனுமதி பெற்றுக்கொண்டு கச்சியினின்றும் புறப்பட்டுத் திருவரங்கப் பெருநகரை நோக்கிப் போகும்போது திருக்கோவிலூரை யடைந்து, ஆங்கெழுந்தருளியிராநின்ற ஆழ்வார்கள், நாயனார்கள் முதலானவர்களையுஞ் சேவித் தந்நாளை யப்பதியிலே கழித்து மறுநாள் திருக்கோவிலூரினின்றும் புறப்பட்டுப் போகும் வழியிலே, "திசையெல்லாங் கமழும் பொழில்சூழ் திருவெள்ளறை நின்றானே" என்று சிறப்பித் தோதப்பெற்று விளங்கும் திருவெள்ளறையிலே தங்கி, வெள்ளறையுட் கல்லறைமேற் பொன்னையுங்கண்டு களித்து உள்ளே புகுந்து, புண்டரீகாக்ஷனையும், நாச்சியாரையுஞ் சேவித்து, அற்றைக்கங்கே யெழுந்தருளி யிருந்து மற்றுநாள் அப்பதியைவிட்டுப் புறப்பட்டு மண்டிணி ஞாலமும் ஏழ்கடலும் நீள்விசும்புங் கழியப் பெரிதான காதலுடனே 'மகா நீசனான எனக்கு இத்தகைய புரு[illegible]தல் கிடைக்கத் தக்கதோ' வென்று எழுந்தருளு[illegible] சற்று தூரத்திலே திருக்கோபுரம், திருமதில் முத[illegible]றையுங் கண்டு சேவித்துக் கைகூப்பி நிரந்தரமான அ[illegible]ரங்க பக்திப் பரவச மேலிட்டால்,

"உந்திமேல் நான்முகனைப் படைத்தா னுலகுண்டவன்
எந்தைபெம்மா னிமையோர்கள் தாதைக்கிட மென்பரால்

சந்திரனோடு மணியுங் கொழிக்கும் புனற்காவிரி
யந்திபோலு நிறத்தார் வயல்சூழ் தென்னரங்கமே"

என்று தொடங்கி, "செய்யசார்ந்த [illegible] சூழ் தென்னரங்கமே" என்றும், "அண்ட [illegible] பொழில் சூழ்ந்தழகார் தென்னரங்கமே" என்றும், "மூன்றிலைக் கும் செல்வப்புனற் காவிரிசூழ் தென்னரங்கமே" என்றும், "செம்பொனாரும் மதில்சூழ்ந் தழகார் தென்னரங்கமே" என்றும், "முன்னிலை யெடுக்கும் புனற்கா விரிசூழ் தென்னரங்கமே" என்றும் "மறையோர் செஞ்சொல் வேள்விப் புகையுங் கமழ்ந்த தென்னரங்கமே" என்றும், "நற்தேனும் பாலுங் கலந்தன்னவர்சேர் தென்னரங்கமே" என்றும், "ஆயபொன்மாமதில் சூழ்ந்தழகாய தென்னரங்கமே" என்றும், "இந்திரன் பிரமனீச னென்றிவர்க ளெண்ணில் பல்குணங்களே யியற்ற, தந்தையுந் தாயு மக்களும் மிக்க சுற்றமுஞ் சுற்றி நின்றகலா, பந்தமும் பந்த மறுப்பதோர் மருந்து பான்மையும் பல்லுயிர்க்கெல்லாம், அந்தமும் வாழ்வுமாய வெம்பெருமா னரங்கமா நகரமர்ந் தானே" என்றும், "ஆழிவண்ண நின்னடியிணை யடைந்தே னணிபொழிற் றிருவரங்கத் தம்மானே" என்றும், எனக்கு மாதல் வேண்டுமென்றடியிணை யடைந்தே னணிபொழிற் றிருவரங்கத் தெம்மானே" என்றும், "உன்னடியனேனும் வந்தடியிணை யடைந்தே னணிபொழிற் றிருவரங்கத் தம்மானே" என்றும், அதற்கடியே னஞ்சிவந்து நின்னடியிணை யடைந்தே னணிபொழிற் றிருவரங்கத் தம்மானே" என்றும், "எனக்குமாக வேண்டுமென் றடியிணை யடைந்தே னணிபொழிற் றிருவரங்கத் தம்மானே" என்றும், "ஆதலால் வந்துன்னடியிணை யடைந்தே னணிபொழிற் றிருவரங்கத் தம்மானே" என்றும், "உலக

# வணிக வைசிய குல விளக்கத்திற்கு நன்கொடையளித்த வணிக வைசிய குலாபிமானிகளின் பெயர்கள்.

## வெளியூரிலிருந்து வந்த நன்கொடைகள்.

| ம-ா-ா-ஸ்ரீ | ரூ | | |
|---|---|---|---|
| ,, ம. க. சா. மாணிக்க செட்டியார், லாண்ரூ மண்டி, கும்பகோணம் .... | 2 | 0 | 0 |
| ,, தி.ம.செ. மருதன் செட்டியார் குமாரன் தியாகராய செட்டியார், ரொக்க லேவாதேவி திருவிடைமருதூர் .... | 2 | 0 | 0 |
| ,, M. S. நடேச செட்டியார், ரொக்க லேவாதேவி, தர்மபுரி .... | 1 | 0 | 0 |
| ,, D.P. சக்கரைவேல் செட்டியார், தர்மபுரி | 0 | 8 | 0 |
| ,, D. B. ராஜமாணிக்கம் L.M.P. டாக்டர் | 0 | 8 | 0 |
| ,, M. N. குருசாமி செட்டியார், மண்டி, தர்மபுரி .... | 0 | 8 | 0 |

## மதராஸ்.

| | | | |
|---|---|---|---|
| ,, எழுத்துகார் ப. வேலுசெட்டியார், பாக்கு மளிகை நெ. 54 நைனியப்பன் தெருவு மண்ணடி, மதராஸ் .... | 1 | 0 | 0 |
| ,, கோ. அ. சின்னராஜு செட்டியார், மளிகை, பெரியமெட்டு, பெரியண்ண மேஸ்திரி தெரு, மதராஸ் .... | 1 | 0 | 0 |
| ,, வா. வெங்கடாசல செட்டியார், வெல்லக் கடை, அண்ணாபிள்ளை தெரு, கொத்தவால் சாவடி, மதராஸ் .... | 1 | 0 | 0 |

ஓம்

பராசக்தி சகாயம்.

உலகத்தில் சிறந்தது! தாதுபுஷ்டிக்கு நிகரற்றது!?

# இது ஓர் யூனனி முறையில் தயாரித்த

# வீரியவிருத்தி அதிசய லேகியம்.

(தாதுவைக் கெட்டிப்படுத்தி ஆனந்தத்தைத் தரும்.)

இதை காலை மாலை 1-தோலா வீதம் சாப்பிட்டு வந்தால் மாதர்களிடம் சரச வார்த்தை பேசும்போதும் லீலா விநோத ஆரம்பத்திலும் நித்திரையிலும் ஸ்கலிதமாகும் இந்திரியத்தை மணிபோல் திரட்டி அதிக போகத்தால் சோர்வடைந்து இருந்தாலும் சோர்வை நீக்கி வேபனமும் அக்கில ஸ்தம்பனமும் அதிக தாது புஷ்டியும் உண்டாகி போகம் நீடித்திருக்கும். தவிரவும், கை கால் அசதி அதிக பலயீனம் சோம்பல் நீக்கி பித்த வாய்வுகளைக் கண்டித்து அதிக வெட்டையால் உண்டாகும் மலச்சிக்கலை வேரறுத்து அன்றாடம் மலத்தை அன்றாடம் நீக்கி மனதிற்கு உற்சாகமும் பசி தீபனமும் புதிய ரத்தமும் பரவி தேகம் இரும்பைப்போல் இருக்கும். இதன் உண்மையை பரிசோதித்து பார்த்தால் நமது வீரிய விருத்தி அதிசய லேகியத்தை என்றும் கைவிடமாட்டீர்கள். தங்கள் சிநேகிதர்களுக்கு தாங்களே சிபார்சு செய்யும்படித் தூண்டும் அவ்வளவு உயர்ந்த சரக்குகளால் தயாரித்து இருக்கிறது. ஒரு முறை தருவித்து சாப்பிட்டு பாருங்கள்.

10-நாள் 20-வேளை சாப்பிடக்கூடிய லேகியம் 1-8-0.

தபால் செலவு வேறு.

---

## மேக சஞ்சீவி எண்ணெய்.

இந்த எண்ணெயை காலையில் ஒருவேளை வீதம் 7-நாள் சாப்பிட்டு வந்தால் மேகம் 21-ம் வெட்டைப் பிரமியம், கண்டமாலை, மேகரணம், பவுத்திரம்; சூலை, முடக்கு, பிடிப்பு, மேகவாய்வு, மேகசூரல், மேகபடலம், புண், சிலந்தி, கிரந்தி, அண்டவாய்வு இவைகளைத் தீர்க்கும்.

7-நாள் எண்ணெய் விலை ரூபா 1-0-0.

தபால் செலவு வேறு.

A. நித்தியானந்த செட்டி,

லாலாகுட்டை முதல் சந்து, பெரியமேட்டு, மதராஸ்.

சந்தன் பிரஸ், 32, பிராட்வே, மதராஸ்.